செய்து கொண்டனர் அல்லது ஆவணங்களை ஒப்படைத்து விட்டுச் சமாதானம் செய்து கொண்டனர். 2334/71-ம் எண்ணுள்ள குற்றவியல் வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் சென்னை உயர் நீதி மன்ற நொடித்தவர் சொத்தாட்சியரிடம் (Official Assignee) நொடிப்பு மனு (Insolvency Petition) ஒன்றைத் தாக்கல் செய்து ஆவணங்கள், நிலங்கள் ஆகிய அனைத்தையும் ஒப்படைத்துள்ளார். அவர் கடன் கொடுத்தவர்களின் பட்டியல் ஒன்றை உயர்நீதி மன்ற நொடித்தவர் சொத்தாட்சியரிடம் கொடுத்துள்ளார். அவர் புகார் கொடுத்தவரின் பெயரையும் அந்தப் பட்டியலில் சேர்த்துள்ளார். எனவே, இவ்வழக்கு குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது நிறுத்திவைக்கப்பட்டது.

Representation from Tamil Nadu Typists and Steno—Typists Association.

*112 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Government of Tamil Nadu Typists-Stenographer's Association has sent any representation to the Government ; and

(*b*) if so, the decision taken thereon ?

தமிழ் நாடு அரசு தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கத்திடமிருந்து கோரிக்கை மனு.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு அரசு தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கம் அரசுக்கு கோரிக்கை மனு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த முடிவு யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு அரசு தட்டச்சர் சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கம் அரசினால் அங்கீகரிக்கப்படாததால் நடைமுறையிலுள்ள விதியின்படி இக்கோரிக்கை மனுவை அரசு பரிசீலிக்கவில்லை.

Government High School at Nemili.

*113 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether the Government have received any complaint to the effect that admission is refused to students in the Government High School at Nemili, North Arcot District, if they merely mention that they are Tamilians without mentioning the caste name ; and

(*b*) if so, the action taken thereon ?

1975 மார்ச் 6]

நெமலியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) சாதிப் பெயர்களைக் குறிப்பிடாமல், தமிழர் என்று மட்டும் குறிப்பிட்டால், வட ஆர்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெமலியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில், மாணவர்கள் சேர்க்கப் பெறுவதில்லை என்று அரசுக்குப் புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) செய்யார் மாவட்டக் கல்வி அலுவலருக்கு ஒரு புகார் வந்துள்ளது.

(இ) நெமலி அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களுக்கு மாணவி செல்வி த. அருள்மொழியை 6-ம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள ஆணையிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, குறிப்பிட்ட ஜாதிப் பெயரைச் சொல்ல விரும்பவில்லை என்று சேர்க்க மறுத்து, அதற்குப்பிறகு பகீரதப் பிரயத்தனம் செய்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சாதிப் பெயரைச் சொல்லித்தான் சேர்க்க வேண்டும் என்பது அரசு விதிமுறையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஜாதிப் பெயரைக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஜாதிப் பெயரைக் குறிப்பிட மாட்டேன் என்று இவர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் சேர்த்துக்கொள்வதற்கில்லை என்று நிறுத்தி வைத்திருக்கிறார் தலைமை ஆசிரியர். பின்னர் மாவட்டக் கல்வி அதிகாரியின் கவனத்துக்கு வந்து, அவர் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டு, சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது எல்லா மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் இது குறித்து ஆணை அனுப்பப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, are there any private instructions given by the Department of the Government that caste and other particulars should be got from every candidate ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பிற்பட்ட வகுப்பினர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பின்னால் அவர்களுக்குரிய சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமானால், இதிலே போட்டால் தான் அதை வழங்க முடியும். இதிலே குறிப்பிடாமல் வேறு எந்த கோர்டிலே குறிப்பிட்டாலும், முற்போக்கு வகுப்பினர் என்றுதான் கருதப் பட்டு விடுவார்கள். அதற்காகத்தான் பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று போடவேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் ஜாதிப் பெயரைப் போட்டுவிட்டு சர்ட்டிபிகேட்டில் கம்யூனிட்டி பெயர் மட்டும் போட்டால் என்ன ஏற்படும் ? நடைமுறையில் இதற்கு ஏதாவது விதி இருக்கின்றதா ? மேல் படிப்பு படிக்கின்றபோது உபகாரச் சம்பளம் கொடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அடி மட்டத்திலிருந்து வந்தால்தான், ஓரளவுக்குச் சரியாக வரும். சிலர் இடத்திற்குத் தகுந்தாற்போல் மாறியும் விடுகிறார்கள். உயர் கல்விக்கு வந்த பிறகு கூட சிலர் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி சலுகைகள் பெற்றிருக்கிறார்கள். அது குறித்து இரண்டு மூன்று வழக்குகள் கூட வந்திருக்கிறது. அவர்களிடமிருந்து திரும்ப வசூல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, ஆரம்பக் கல்வி, உயர் நிலைக்கல்வி ஆகிய கட்டங்களிலேயே இந்தக் குறிப்புகளைச் சரிவரக் கொடுத்துவிட்டால், பிற்காலத்தில் இப்படிச் சங்கடங்கள் இல்லாமலிருக்கலாம்.

Duty Allowance to Headmasters.

***114** *Q.*—**Thiru P. R. THOMAS** : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Headmasters of High Schools are not being paid the duty allowance now ;

(*b*) if so, whether the Government will renew the payment of the same to them ; and

(*c*) whether the Government will consider giving Selection Grade scale of pay to the Headmasters also ?

தலைமை ஆசிரியர்களுக்கு அலுவல்படி.

திரு பி. ஆர் தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அலுவல்படி (Duty Allowance) தற்போது வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அரசு, மீண்டும் அவர்களுக்கு அத்தொகையை வழங்குமா ?

(உ) தலைமை ஆசிரியர்களுக்கும், தேர்வு நிலைச் சம்பள வீதம் வழங்குவதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) and (உ) தலைமை ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம்தேதி முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அதனால் அவர்களுக்கு தனிச் சம்பளம் வழங்க இடமில்லை. அவர்களுக்கு தேர்வுநிலை ஊதிய விகிதம் ஏற்படுத்தவும் தேவையில்லை.